**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு.சா.சேதுராம வர்மா,**
**இயக்குநர்**

**ந.க.எண்.020958 /பி1/2021** **நாள் : 01.04.2022**

**பொருள்:** பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மே 2022 – பள்ளி மாணாக்கர்கள் – அறிவியல் பாட செய்முறைத் தேர்வு நடத்துதல், மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் (Download) செய்தல் மற்றும் சில அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

******

**ஆணை:**

நடைபெறவிருக்கும் மே 2022 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதவுள்ள மாணாக்கர்களுக்கு அறிவியல் செய்முறைத் தேர்வுகளை **25.04.2022 முதல் 02.05.2022வரை** நடத்திட, அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்/முதல்வர்களுக்கு கீழ்க்கண்டவாறு அறிவுரை வழங்கப்படுகிறது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள கால அட்டவணை மற்றும் அறிவுரைகளைப் பின்பற்றி செய்முறைத் தேர்வுக்கான அனைத்துப் பணிகளையும் முடித்திட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

## SSLC MAY 2022 PRACTICAL EXAMINATION SCHEDULE

### For Regular Candidates

| | |
|---|---|
| Empty Mark Sheets for Practical Exam with Register Number downloading from (for regular candidates) | **11.04.2022 to 29.04.2022** |
| Practical Examination to be conducted | **25.04.2022 to 02.05.2022** |

### Regular Candidates

| | |
|---|---|
| Mark Sheet to be submitted to DEO & Practical Exempted Candidate Letter & List | **On or Before 04.05.2022** |
| Online entry of Marks by DEO for regular | **29.04.2022 to 10.05.2022** |

அறிவியல் செய்முறைத் தேர்விற்கான மதிப்பெண் பட்டியல் தயாரிக்கும் மென்பொருள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட உள்ளது.

1. **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் சென்று **Click to access Online Portal** என்ற **Option-ஐ Click** செய்யவும்.
2. SSLC MAY 2022 எனத் தோன்றும் பகுதியை **Click** செய்யவும்.
3. தங்களது பள்ளியின் **User ID** மற்றும் **Password-ஐ Type** செய்து **Sign In** என்ற **Option-ஐ Click** செய்யவும்.
4. **SSLC MAY 2022 SCIENCE PRACTICAL BATCH ALLOTMENT** என்ற பகுதியினை **Click** செய்யவும்.
5. **Mark Sheet** என்ற **Option-ஐ Click** செய்தால் **Practical** தேர்வுக்கான மதிப்பெண் பட்டியல் **Download** ஆகும். அதனை **Printout** எடுத்துக் கொள்ளவும்.
6. **Download Attendance Sheet** என்ற பகுதியை **Click** செய்தால் **Attendance Sheet Download** ஆகும். இதனை தேர்வின்போது மாணவர்களிடம் கையொப்பம் பெற பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
7. இதனை அடிப்படையாகக் கொண்டு செய்முறைத் தேர்விற்கு மாணவர்களை அனுமதித்திடல் வேண்டும்.

<u>பொதுவான அறிவுரைகள்</u>

ஒரு பெயர்பட்டியலில் காணப்படும் தேர்வர்கள், வெவ்வேறு செய்முறைத் தேர்வு மையங்களுக்குத் தொடர்பு உடையவர்களாக இருந்தால், பெயர்ப்பட்டியலை நகல் எடுத்து சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

செய்முறைத் தேர்வு முடிவுற்ற பின்னர் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலிருந்தும் செய்முறை மதிப்பெண் பட்டியல்களை <u>04.05.2022–க்குள்</u> பெறவேண்டும்.

அனைத்து பள்ளிகளிலிருந்து பள்ளி மாணவர்களது மதிப்பெண் பட்டியல் பெறப்பட்டவுடன் மாவட்டக் கல்வி அலுவலகம் மூலமாக **On Line-ல்** பதிவேற்றம் செய்திடவேண்டும். இப்பணி <u>29.04.2022–ல் தொடங்கி 10.05.2022–க்குள்</u> முடிக்கப்பட வேண்டும்.

தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளி மாணவர்கள் அனைவரது செய்முறைத் தேர்வு மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை மாவட்டக் கல்வி அலுவலர் உறுதி செய்து கொள்ளவேண்டும். எந்த ஒரு மாணவரது மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்படாமல் இருத்தல் கூடாது.

அறிவியல் செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் பதிவேற்றம் செய்யும் பணி முடிவுற்றவுடன், மதிப்பெண் பட்டியல்களை சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் உடன் ஒப்படைக்குமாறு, அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இறுதியாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழை பூர்த்தி செய்து மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலக முத்திரையுடன் மாவட்டக் கல்வி அலுவலர் கையொப்பமிட்டு, அச்சான்றிதழை **12.05.2022–க்குள்** இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை தவறாமல் பின்பற்றி உரிய முறையில் திட்டமிட்டு, இத்தேர்வினை தனிக்கவனம் செலுத்தி எந்தப் புகாருக்கும் இடமளிக்காமல் சிறப்பாக நடைபெறும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–
இயக்குநர்

**இணைப்பு :** மேற்கூறியவாறு, செய்முறைத் தேர்வு நடத்துதல் சார்பான அறிவுரைகள்

பெறுநர்:

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. இணை இயக்குநர் (கல்வி), பாண்டிச்சேரி

நகல்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

மாவட்டக் கல்வி அலுவலகம்

# சான்றிதழ்

---------------------- கல்வி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து வகைப் பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் (எவரும் விடுபடாமல்) அறிவியல் செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டன எனச் சான்றளிக்கிறேன்.

தேதியுடன் கூடிய கையொப்பம்
மாவட்ட கல்வி அலுவலர்

தேதி :

இடம் :